**கவனிக்க** .- *2016.03.04 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1958 - 2016 මාර්තු මස 11 වැනි සිකුරාදා - 2016.03.11**

*1958 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 774 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 790 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 793 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, மாச்சு மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

## பாலிந்தநுவர பிரதேச சபை

மேல் மாகாண அரச சேவை (மாகாண சபை) வெற்றிடம்

*1. பாலிந்த நுவர பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள சாரதி சேவையில் ஈடுபடுத்தி கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்.*

| இலக்கம் | தொழில் விபரம் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள விபரம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1. | சுகாதார தொழிலாளி | 01 | ரூபா 11,730 – 10 x 120 – 10 x 130 – 10 x 145 – 12 x 160 - ரூபா 17,600 (ஆரம்ப நிலுவை முதல்) | விண்ணப்பதாரி தரம் 8 அல்லது தரம் 9 சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

**2. தேவையான ஏனைய தகைமைகள்:**

(1) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதிக்கு வயது 18 க்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். பொதுச்சேவை/மாகாண சேவையில் தற்போது கடமை புரிபவர்களுக்கு வயதெல்லை கிடையாது.

(2) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(3) விண்ணப்பதாரிகள் மேல் மாகாணத்தில் குறைந்தது 3 வருடங்கள் நிரந்தர பதிவாளராக இருத்தல் வேண்டும் (வாக்காளர் பட்டியல்/பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்) ;

(4) பாலிந்தநுவர பிரதேசத்தில் வசிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் ;

(5) சிறந்த நல்லொழுக்கமுள்ளவராகவும், உடல் ஆரோக்கியமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும் ;

(6) கடும் தண்டனை அடிப்படையில் நீதிமன்ற குற்றவாளிக்கான தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது ;

(7) அரசாங்க உள்ளூராட்சி அல்லது திணைக்கள சேவையில் பணி நீக்கப்பட்டவராக இருத்தல் கூடாது ;

(8) பாலிந்தநுவர பிரதேச சபையில் தற்போது நிரந்தர/தற்காலிக பதிலீட்டு, கொடுப்பனவு அடிப்படையில் சேவையிலிருக்கும் பணியாளருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் ;

(9) விண்ணப்பதாரிகள் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிப்பதற்கான குறைந்தபட்ச தகுதியை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் ;

(10) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு முன் 5 வருடக்காலம் பாலிந்தநுவர பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்தில் நிரந்தர வதிவிடத்தை கொண்டோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் ;

(11) இச்சேவை தொடர்பாக அரச சேவை, மாகாண சேவை பணியாற்றியிருக்கும் விண்ணப்பதாரிகள் விசேட தகுதியுடையவர்களாக கருதப்படுவார்கள்.

**3. சேவையை தக்கவைப்பதற்கான நியதிகள்:**

(i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உடையது ;
(ii) பதவி மூன்று வருட பயிற்சிக்காலமுடையது ;
(iii) இவ்விண்ணப்பமானது, இலங்கை அரச நிறுவனங்களின் ஆலோசனைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் அரசாங்கத்தினால் காலத்துக்கு காலம் வெளியிடப்படும் வேறு ஆலோசனைகளுக்கும், கட்டுபாடுகளுக்கும் இணங்கி சேவையாளர்கள் சேவை புரிதல் வேண்டும்.

**4. ஆட்சேர்ப்பு முறை:**

(1) அரச திட்டமிடல் புள்ளிவிபர இலக்கம் 15/90 படி எழுத்து மொழியில் அல்லது நேர்முகப்பரீட்சை மூலம் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர் ;

(2) விண்ணப்பப்படிவத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தனுப்புதல் வேண்டும். நேர்முக பரீட்சையின்போது மூலச்சான்றிதழ்கள் சமர்ப்பிக்கவும் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) வசிப்பிடத்தை உறுதிசெய்யும் பிரதேச செயலாளரின் சான்றிதழ் ;
(4) அண்மையில் பெற்றுக்கொண்ட நடத்தை தொடர்பான சான்றிதழ் (இரண்டு சான்றிதழ்கள்) ;
(5) தொழில் தொடர்பான சான்றிதழ்கள்.
(அரச சேவை அல்லது மாகாண சேவையில் உள்ளவர்கள் திணைக்களத்தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும்.)

5. தகுதியானவர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

6. **விண்ணப்பப்படிவம் அனுப்பும் முறை**.- விண்ணப்பதாரிகள் கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து 2016.03.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். "செயலாளர், பாலிந்தநுவர பிரதேச சபை, பாலிந்த நுவர."

விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும். பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்கள் கோரப்படும்போது அல்லது கோரப்பட்ட பின்பு தாமதங்கள் அல்லது மாற்றங்கள் ஏற்படுத்தல் அல்லது இவ் அறிவித்தலை தடைசெய்தல் அல்லது மீள் ஆராய்தல் போன்ற எல்லா அதிகாரங்களும் பாலிந்தநுவர பிரதேச சபை செயலாளருக்குரியது.

செயலாளர்,
பாலிந்தநுவர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பாலிந்தநுவர பிரதேச சபை,
2016, மாசி 16.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பாலிந்தநுவர பிரதேச சபை**

மேல் மாகாண அரச சேவையின் ................. பதவிக்கான மாதிரி விண்ணப்பப்படிவம்

1. முதலெழுத்துடன் பெயர் :-----.
2. முதலெழுத்து குறிப்பிடும் பெயர் :-----.
3. நிரந்தர பதிவு முகவரி :-----.
4. நிரந்தர முகவரி :-----.
5. விவாகமானவரா?/ஆகாதவரா? :-----.
6. பால் (ஆண்/பெண்) :-----.
7. பிறந்த திகதி : - ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.
8. நீர் பிறப்பினால் இலங்கை பிரசையா/பதிவின் மூலமா? : -----.
9. கல்வித் தகைமைகள் : - க. பொ. த. (சா. த.) பரீட்சை சித்தியடைந்த ஆண்டும் சுட்டிலக்கமும் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |

ஏனைய தகைமைகள்

10. தொழிற் தகைமைகள் :-----.
11. சேவை அனுபவம் :-----.
12. தற்போது சேவையாற்றும் நிறுவனம் :-----.

(1) தற்போது வகிக்கும் பதவி :----.
(2) அப்பதவியில் நியமிக்கப்பட்ட திகதி :----.
(3) முன்னர் சேவையாற்றிய நிறுவனத்தின் பதவி :----.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**தற்போது அரச சேவையில் இருப்போருக்கான நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி ............................................... இந்நிறுவனத்தில் ............................ ஆக சேவையாற்றுகிறாரெனவும், அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் சட்டத்துக்கு புறம்பாக எவ்வித குற்றமும் புரியவில்லை அல்லது ஆளாகவில்லை எனவும் உறுதிப்படுத்துவதோடு இவ்விண்ணப்பத்தினை சிபாரிசு செய்கிறேன்.

-----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் : -----.
பதவி பெயர் : -----.
திணைக்களம்/ நிறுவனம் : -----.

3-206

---

**அம்பாந்தோட்டை பிரதேச சபை**

பதவிகள் வெற்றிடம்

அம்பாந்தோட்டை பிரதேச சபையில் வெற்றிடங்களாகியுள்ள கீழே காட்டப்பட்டுள்ள பதவிகளுக்கான ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டு தகைமைகளுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள குறியீட்டு இல. | சம்பள அளவுத்திட்டம் | கல்வி ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | மின்சார தொழில் நுட்பவலர் | 1 | PL 2 2006 (A) | ரூபா 12,210-10×130-10×145-10×160-10×170-ரூபா 18,600 | க. பொ. த. (சா. த. ) பரீட்சையில் அல்லது தேசிய கல்வி பொது தராதரப்பத்திரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது ஏதேனும் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்<br>மற்றும்<br>(அ) வாழ்க்கைத்தொழிலுக்குரிய தேசிய வாழ்க்கைத் தொழில் தகைமைகள் 2 ஆம் மட்டத்தில் (NVQ 2) அல்லது 3 ஆம் மட்டத்தில் (NVQ 3) சான்றிதழ் பெற்றிருத்தல்;<br>அல்லது<br>(ஆ) தொழில்நுட்ப கல்வி பயிற்சி திணைக்களத்தில் (DTET) தொழிலுக்குரித்தான துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறி சான்றிதழ் பெற்றிருத்தல்;<br>அல்லது |

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள குறியீட்டு இல. | சம்பள அளவுத்திட்டம் | கல்வி ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| | | | | | (இ) தேசிய இளைஞர் சேவை சபையில் (NYSC) தொழிலுக்குரித்தான துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறி சான்றிதழ் பெற்றிருத்தல்;<br>அல்லது<br>(ஈ) இலங்கை வாழ்க்கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் (VTA) தொழிலுக்குரித்தான துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறி சான்றிதழ் பெற்றிருத்தல்;<br>அல்லது<br>(உ) தேசிய பயிற்சி, தொழில்நுட்ப பயிற்சி திணைக்களத்தில் (NAITA) தொழிலுக்குரித்தான துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறி சான்றிதழ் பெற்றிருத்தல்;<br>அல்லது<br>(ஊ) மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தில் தெழிலுக் குரித்தான துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத பாடநெறி பூர்த்திசெய்த சான்றிதழ் பெற்றிருத்தல்.<br>**அனுபவம்**.- உரிய துறையில் அனுபவமானது மேலதிக தகைமையாகும். |
| 2 | சுகாதாரத் தொழிலாளி | 1 | PL 1-2006(A) | ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 | 8 ஆந் தரத்தில் (9 ஆம் ஆண்டு) சித்திபெற்றிருத்தல் வேண்டும். |

**பொது நிபந்தனைகள் :**

(i) விண்ணப்பதாரிகள் பரம்பரையாகவோ அல்லது பதிவின்மூலமோ இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையும், நல்ல தேகாரோக்கியமுமுடையவராக இருத்தல் வேண்டும்;

(iii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே சேவையிலுள்ளோருக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது. இருந்தபோதிலும் இப்பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் தினத்தன்று ஆகக்கூடிய வயதெல்லை விஞ்சுதல் ஆகாது);

(iv) தண்டனைச் சட்டக்கோவையின்கீழ் நீதிமன்றத்தில் தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது அல்லது மாகாண அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டவராக இருத்தல் கூடாது ;

(v) சேவை தேவைப்பாட்டின்மீது சட்டப்படியான நேர்முகப் பரீட்சையிலிருந்து தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் ;

(vi) விண்ணப்பப்படிவங்களை கோரியதன் பின்னர் அல்லத கோரும் காலப்பகுதிக்கிடையில் இவ்வாட்சேர்ப்புக்களை தாமதித்தல் அல்லது மாற்றம்செய்தல் அல்லது இவ்வறிவித்தலை இரத்துச்செய்தல் ஆகியவற்றிற்கான சகல தத்துவங்களும் அம்பாந்தோட்டை பிரதேச சபை தவிசாளருக்கே உரித்தானதாகும்.

**ஆட்சேர்ப்பு செய்யும் விதம் :**

(i) கட்டமைப்பு நேர்முகப்பரீட்சை பின்னர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் ;

(ii) குறிப்பிடப்பட்ட தகைமைகளை பூர்த்திசெய்துள்ளோர் மட்டுமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**சேவை நியதிகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும் ;

(ii) விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;

(iii) நியமனம் மூன்று வருட தகுதிகாண் நிலைக்கு உட்படுவதுடன் 3 வருட இறுதியில் வேலை, வரவு மற்றும் நடத்தை திருப்திகரமானதாக இருக்கும் ஊழியர்கள் மட்டுமே நிரந்தரமாக்கப்படுவார்கள் ;

(iv) இவ்வாட்சேர்ப்பு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை ஒழுங்குவிதிகளுக்கும் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் திணைக்கள கட்டளைகளுக்கும் அரசினால் அல்லது தென் மாகாண சபையினால் காலத்திற்குக்காலம் ஆக்கப்படும் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் கட்டளைகளுக்கும் அனுகூலமாக செயற்படுவதற்கும் எல்லா ஊழியர்களும் கட்டுப்பட்டு இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் விதம்**.- விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 அளவிலான தாளில் தயாரித்த விண்ணப்பப்படிவத்தை 28.03.2016 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் “தவிசாளர், அம்பாந்தோட்டை பிரதேச சபை, சிசிலசகமை, மிரிஜ்ஜவில” எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை விண்ணப்பத்தை தாங்கியுள்ள கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் “.........................................” என எழுதுதல் வேண்டும். பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் குறிப்பிடப்பட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களை கோரியதன் பின்னர் அல்லது கோரும் காலப்பகுதிக்கிடையில் இவ்வாட்சேர்ப்புக்களை தாமதித்தல் அல்லது மாற்றஞ்செய்தல் அல்லது இவ்வறிவித்தலை இரத்துச்செய்தல் ஆகியவற்றிற்கான சகல தத்துவங்களும் ஹம்பாந்தோட்டை பிரதேச சபை தவிசாளருக்கே உரித்தானதாகும்.

(4) பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தனுப்புதல் வேண்டும் என்பதுடன் மூலப்பிரதிகளை நேர்முகப்பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) நிரந்தர வதிவை நிரூபிக்கும் வாக்காளர்ப்பட்டியலின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்று ;
(4) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள் இரண்டு (இதில் ஒன்று பிரதேசத்தின் கிராம அலுவலரிடம் பெற்றதாக இருத்தல் வேண்டும் ;
(5) அனுபவம் பற்றிய சான்றிதழ்.

காமினி சமரகுணரத்ன,
தவிசாளர்,
அம்பாந்தோட்டை பிரதேச சபை.

அம்பாந்தோட்டை பிரதேச சபை அலுவலகம்,
சிசிலசகமை,
மிரிஜ்ஜவில,
2016, பெப்புருவரி 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அம்பாந்தோட்டை பிரதேச சபை**

...................................................................பதவி

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்:-----.
2. முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் :-----.
3. தபால் விலாசம் :-----.
4. தொலைபேசி இலக்கம் :-----.
5. பிறந்த திகதி: ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.
6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
7. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியன்று வயது :
   வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----.
8. பால் (ஆண்/பெண்) :-----.
9. விவாகமானவரா? விவாகமாகாதவரா? :-----.
10. தேசிய இனம் :-----.
11. நீர் இலங்கை பிரசையா? அப்படியாயின் பதிவின் மூலமா? பரம்பரையாகவா? :-----.
12. கல்வித் தகைமைகள் :----.
13. அனுபவம் மற்றும் தொழில்சார் தகைமைகள் :-----.
14. நீதிமன்றில் ஏதேனும் குற்றத்திற்காக எப்போதாவது தண்டிக்கப்பட்டுள்ளீராயின் தண்டனைப் பற்றிய விபரம் :-----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதும் என உறுதியுரைக்கிறேன். என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதென அல்லது பிழையானதென நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் எவ்வித நட்டஈடுமின்றி பதவி நீக்கத்திற்கு ஆட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**தற்போது அரச சேவையில் பதவி வகிக்கும் விண்ணப்பதாரிகள் பொருட்டு திணைக்கள தலைவரின் சான்றிதழ்**

விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி ................................................ தற்போது இத்திணைக்களத்தில்/ நிறுவகத்தில் ............................ ஆக சேவையாற்றுகிறார். அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு நியமிக்கப்படுவாராயின், அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது. அவர் எவ்விதத்திலும் சட்டத்திற்குட்பட்ட தண்டனைக்கு ஆளாகவில்லை என இத்தால் சான்றுபடுத்துவதுடன் விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கிறேன்.

-----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திணைக்களம்/ நிறுவனம் :-----.
பதவி முத்திரை இடவும் : -----.
திகதி : -----.

3-227

---

**கங்க இஹல கோறளே பிரதேச சபை**

மத்திய மாகாண அரச சேவையின் பதவி வெற்றிடங்கள்

மத்திய மாகாண அரச சேவையின் கங்க இஹல கோறளே பிரதேச சபையில் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான உரிய தகைமைகளைக் கொண்ட கங்க இஹல கோறளே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்போரிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் அனுபவம் |
|---|---|---|---|---|
| 1 | மின்சார தொழில் நுட்பப் பணியாளர் | 01 | PL 2-2006A ரூ. 12,210-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,600. | (அ) க.பொ.த.(சா.த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம், தமிழ் மொழியுட்படக் குறைந்தது ஆறு பாடங்களில் இரண்டு திறமைச் சித்தி களுடன் சித்திபெற்றிருத்தல் வேண்டும். |
| | | | | (ஆ) தேசிய தொழில்சார் தகைமையின் தொழில் தொடர்பான 2 ஆவது மட்டம் (NVQ 2) அல்லது 3 ஆவது மட்டம் (NVQ 3) சான்றிதழ் பெற்றிருத்தல் ; அல்லது, |
| | | | | (இ) தேசிய தொழிற் பயிற்சித் திணைக்களத்தின் (DTET) தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் ; அல்லது |
| | | | | (ஈ) தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் (NYSC) தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் ; அல்லது |
| | | | | (உ) இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை VTA தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் ; அல்லது |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் அனுபவம் |
|---|---|---|---|---|
| | | | | (ஊ) தேசிய தொழில் பயிலுநர் மற்றும் பயிற்சித் திணைக்களத்தில் (NAITA) ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல் ; அல்லது<br><br>(எ) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுபெற்ற தொழிற் பயிற்சி நிறுவனமொன்றில் தொழில் தொடர்பான ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறியைப் பயின்ற சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>(ஏ) உரிய துறையில் குறைந்தது 2 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். |
| 2 | கனரக வாகன இயக்குநர் | 01 | PL 3-2006A<br>ரூ. 12,470-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,860. | (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது இரண்டு திறமைச் சித்திகளுடன் குறைந்தது 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இவற்றில் 5 பாடங்கள் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.<br><br>(ஆ) மோட்டார் வாகனம் செலுத்துவதற்கு மோட்டார் வாகன ஆணையாளர் வழங்கிய உரிய வாகனத் தரத் தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல். பேக்கோ லோடர் மற்றும் மோட்டார் கிறேடர் இயக்குவதற்குரியது.<br><br>(இ) 34 அந்தர் நிறைக்கு அதிகமான ட்ரேலர் மற்றும் 32 ஐ விடக் குறையாத பயணிளுக்கான பஸ்வண்டி ஓட்டுநருக்கான சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல். (ஆட்சேர்ப்புத் திகதிக்கு 3 வருடங்களுக்கு முன்னரான காலத்துக்கென மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட உரிய வகுப்பு அனுமதிப்பத்திரம் அல்லது புதிய அனுமதிப்பத்திரத்துக்கு அமைய பி வகுப்புச் சான்றிதழ் பெற்றிருத்தல் ; அல்லது<br><br>மேற்குறித்த அனுமதிப்பத்திரங்களுக்கு மேலதிகமாக உரிய பதவிக்கான இயந்திர இயக்கம் பற்றி அரசு அங்கீகரித்த நிறுவனம் (NAITA/ICTAD) ஒன்றிலிருந்து பயிற்சி பெற்ற (NVQ4 தரத்துக்குக் குறையாத) சான்றிதழ்<br><br>பெக்கோ லோடர் மற்றும் மோட்டார் கிறேடர் இயக்க முடியுமான அனுபவம் கொண்டுள்ளமை விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.<br><br>(ஈ) ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் பெற்ற பின்னர் குறைந்தது 3 வருடகால அனுபவம் பெற்றிருத்தல். சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.<br><br>(உ) பகல், இரவு நேரங்களில் சேவையில் ஈடுபடுவதற்குரிய சிறந்த கண்பார்வையும் தேவையான அளவு உடல் மற்றும் உளத் தகைமையும் பெற்றிருத்தல் வேண்டும். |

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்கள் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் அனுபவம் |
|---|---|---|---|---|
| | | | | (ஊ) ஆகக் குறைந்த உயரம் 5 அடி 2 1/2 அங்குலமாக இருத்தல் வேண்டும். அத்துடன் வீதிப் போக்குவரத்து விதிகள் பற்றிய தெளிவான அறிவு இருத்தல் வேண்டும். |

2. **ஆட்சேர்ப்புக்கான பொது நிபந்தனைகள்:**

(1) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(2) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று கங்க இஹல கோறளே பிரதேச சபை எல்லைக்குள் தொடர்ச்சியாக 3 வருடகாலத்துக்குக் குறையாத வதிவைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்;

(3) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(4) சிறந்த நன்னடத்தை உடையவராகவும், தீவின் எப்பகுதியிலும் பணியாற்றக்கூடிய நல்ல தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்;

(5) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாகக் கருதப்படாதவராகவோ அல்லது அரச, உள்ளூராட்சி சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டவராகவோ இருத்தல் கூடாது.

3. **ஆட்சேர்ப்பு முறை:**

(1) விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் தகைமைகள் பரிசீலிக்கப்பட்டு அவற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படுவர்;

(2) கனரக வாகன ஓட்டுநர் பதவிக்கென ஆட்சேர்ப்பு செய்ய முன்னர் எழுத்துப் பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளது தொழிற் தகைமைப் பெறுபேறுகளின்படி கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களிலிருந்து தேர்ச்சியின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைபெறும்.

(3) எழுத்துப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு அதிகப் புள்ளிகள் பெற்றவர்கள் மட்டுமே செயன்முறைப் பரீட்சகர் குழுவினரால் நடத்தப்படும் வாகனம் ஓட்டும் தேர்ச்சியை அளவிடும் செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். தேவையான தகைமைகள் அனைத்தையும் பரிசோதித்த பின்னர் கூடிய புள்ளியைப் பெற்றவர்களிலிருந்து தேர்ச்சியின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

4. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்:**

**மின் தொழில்நுட்ப உதவியாளர்**

(1) இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதிய உரித்துடையவை;

(2) விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்;

(3) தெரிவுசெய்யப்படுவோர் மூன்று வருடகாலத் தகுதிகாண் சேவைக் காலத்துக்கு உட்படுவர். பதவி உயர்த்தப்படும் ஊழியர் ஒரு வருட வேலைப் பரிசோதனைக் காலத்துக்கு உட்படுவர்;

(4) தேவைப்படும் அளவு பிணை வைப்பைப் பணமாகவோ அல்லது விதிக்கப்படும் வேறு வகையிலோ அவற்றைப் பிரதேச சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்;

(5) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் மேலதிகமாக நிதிப் பிரமாணங்களுக்கும், ஆளுநர் அவர்களது கட்டளைகளுக்கும், மாகாண அரசசேவைகள் ஆணைக்குழு காலத்துக்குக் காலம் விதிக்கும் கட்டளைகளுக்கும், உள்ளூராட்சி அமையங்களது தலைவர்களின் கட்டளைகளுக்கும் நியமங்களுக்கும் அமைய செயற்படுவதற்கு உட்படுதல் வேண்டும்;

(6) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் காலத்தில் ஆட்சேர்ப்பைத் தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும், தாமதப்படுத்தும் அல்லது இரத்துச் செய்யும் அனைத்து அதிகாரமும் கங்க இஹல கோறளே பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

**கனரக வாகனம்**

(1) கனரக வாகன இயக்குநர் பதவிக்கென ஒப்பந்த அடிப்படையில் 1 வருட சேவைக் காலத்துக்கென ஆட்சேர்க்கப்படுவார்.

(2) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்;

(3) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் காலத்தில் ஆட்சேர்ப்பைத் தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும், தாமதப்படுத்தும் அல்லது இரத்துச் செய்யும் அனைத்து அதிகாரமும் கங்க இஹல கோறளே பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு;

(4) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் மேலதிகமாக நிதிப் பிரமாணங்களுக்கும், ஆளுநர் அவர்களது கட்டளைகளுக்கும், மாகாண அரசசேவைகள் ஆணைக்குழு காலத்துக்குக் காலம் விதிக்கும் நியமங்களுக்கும், உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி அமையங்களது தலைவர்களின் கட்டளைகளுக்கும், அமைய செயற்படுவதற்கு உட்படுதல் வேண்டும்.

5. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**.-இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கு அமைவாக ஏ4 தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2016.03.28 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், கங்க இஹல கோறளே பிரதேச சபை, குருந்துவத்தை பஸார்" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற, தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. **சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்கள்**.- விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும். முதற்பிரதிகள் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்:-

(1) பிறப்புச் சான்றிதழ் ;

(2) கல்விச் சான்றிதழ் ;

(3) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் பிரதேச செயலாளரது சான்றிதழ் ;

(4) அண்மையில் பெறப்பட்ட இரண்டு குணச் சான்றிதழ்கள் (ஒன்று கிராம அலுவலரிடமிருந்து) ;

(5) தேசிய ஆள் அடையாள அட்டை ;

(6) அனுபவச் சான்றிதழ்கள் ;

(7) செல்லுபடியாகும் வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் (வாகன ஓட்டுநருக்கானது)

(8) கனரக வாகன இயக்குநர் பற்றிய அனுபவச் சான்றிதழ் (வாகன ஓட்டுநருக்கானது).

தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புகளிடையே கருத்து மயக்கம் ஏற்படின், சிங்கள மொழியே மேலோங்கி நிற்கும்.

டீ. ஏ. ரஞ்சனி பிரேமலதா,
செயலாளர்,
கங்க இஹல கோறளே பிரதேச சபை,

கங்க இஹல கோறளே பிரதேச சபை,
குருந்துவத்த பஸார்.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**கங்கஇஹல கோறளே பிரதேச சபை**

................................ பதவிக்கான விண்ணப்பப் படிவம்

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆ) முழுப்பெயர் :----.
2. அஞ்சல் முகவரி :----.
3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
4. பிறந்த திகதி :-
வருடம் :---- மாதம் :---- திகதி :----.
2016.03.28 ஆந் திகதியில் உள்ளவாறான வயது:
வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.
5. ஆண்/பெண் :----.
6. விவாகமானவர்/தனித்தவர் :----.
7. தேசிய இனம் :----.
8. பிறப்பினாலா அல்லது பதிவினாலா நீர் இலங்கைப் பிரசை :----.
9. கல்வித் தகைமைகள் :----.
10. தொழில் மற்றும் ஏனைய தகைமைகள் (சான்றிதழ்/அனுமதிப்பத்திரம்) :----.

11. வாகன ஓட்டுநர் பதவியாயின்,
 (அ) வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திர இலக்கம் :----.
 (ஆ) வழங்கப்பட்ட திகதி :----.
12. நீங்கள் இதுவரையில் இந்த நிறுவகத்தில் பணியாற்றுவதாயின், பதவியும் சேவைக்காலமும் :----.
 நியமனத்தின் தன்மை (நிரந்தர/சமயோசித/தற்காலிக பதிலீட்டு கொடுப்பனவு அடிப்படை)

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் நான் அறிந்த வரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விடயங்களுள் ஏதேனும் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால், நியமனத்துக்கு முன்னரெனின் நான் தகுதியற்றவனாக ஆக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின், நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

3-250

---

**சீதாவக்கபுர நகர சபை - அவிசாவளை**

மேல் மாகாண மாகாண அரச சேவை வெற்றிடங்கள்

மேல் மாகாண மாகாண அரச சேவையில் சீதாவக்கபுர நகர சபையில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்களை சேர்த்துக்கொள்வதற்காக கீழே குறிக்கப்படும் தகைமைகளைக் கொண்ட மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அறிவித்தலில் கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயார் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை (12 × 8 அங்குலம் அளவிலான) "செயலாளர், சீதாவக்கபுர நகர சபை, அவிசாவளை" என்ற முகவரிக்கு 2016, மாச்சு 31 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும் அல்லது நேரடியாக வந்து ஒப்படைக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். பூரணப்படுத்தப்படாத அத்துடன் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஏற்கனவே அரச சேவையில் கடமையாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப் படிவத்தினை தத்தமது திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

| தொடர் இலக்கம் | பதவிப்பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் (மாதாந்தம்) | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | கனரக வாகன இயக்குநர்கள் (II ஆம் தரம்) | 01 | ரூபா 12,470-10×130-10×145-10×160-12×170- ரூபா 18,860 (PL - 3 2006 A) இந்த சம்பள அளவுத் திட்டத்தின் 12 ஆவது கட்டம் ஆரம்ப சம்பள கட்டமாகும். | (i) தேசிய பொது கல்விச்சான்றிதழ் (சா. த.) பரீட்சையில் அல்லது கல்விப் பொது தராதரப் பத்திரம் (சா.த.) பரீட்சையில் ஏதாவது இரண்டு பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.<br>(ii) கொள்கலன் எடை 34 அந்தருக்கு அதிகமான பாரமுடைய மோட்டார் வாகனம் மற்றும் கனரக டேலர் மற்றும் 32 பயணிகளுக்கு அதிகமாக கொண்டு செல்வதற்கு அனுமதிப்பத்திரம் உடைய பேரூந்து வண்டியினை ஓட்டுவதற்காக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட திறமைச் சான்றிதழினை பெற்றிருத்தல்.<br>(iii) குறைந்தது உயரம் 5 அடி 6 அங்குலமாயிருத்தல் வேண்டும்.<br>(iv) ஆட்சேர்ப்பதற்கு உத்தேசிக்கும் பதவிக்குரிய கனரக இயக்கம் சம்பந்தமான அரசின் அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவத்தினை பெற்றிருத்தல். |

| தொடர் இலக்கம் | பதவிப்பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் (மாதாந்தம்) | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | (ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமான அரச நிறுவனம், மாகாண சபை நிறுவனம், பகுதி அரச நிறுவனம், மாகாண சபை நிறுவனம் அல்லது அரச பதிவுசெய்யப்பட்ட தனியார் நிறுவனம் என அடையாளப்படுத்தப்படும்.) |
| | | | | (v) மோட்டார் வாகன விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவிருத்தல் வேண்டும். |
| 2 | திண்ம கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ மத்திய நிலைய பொறுப்பாளர் தரம் III | 01 | ரூபா 13,120-10×145-11×170-10×240-10×320- ரூபா 22,040 (MNI - 2006 A) | (i) கல்வி பொது தராதரப் பத்திர (சா.த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு விடயங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.<br>மற்றும்<br>கல்வி பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) பரீடசையில் குறைந்தது ஒரு (01) பாடத்திலாவது (சாதாரண பொது பரிசீலனை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல். |

**3. வயதெல்லை.-**

(i) கனரக இயந்திர இயக்குநர் (தரம் II) : விண்ணப்பம் கோரப்படும் கடைசித் திகதியில் வயது, 18 வருடத்திற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். தற்பொழுது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை பொருத்தமற்றது.)

(ii) திண்ம கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ மத்திய நிலைய பொறுப்பாளர் (தரம் III) : விண்ணப்பம் கோரப்படும் திகதியில் வயது 18 வருடத்திற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். தற்பொழுது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை பொருத்தமற்றது.)

**4. ஆட்சேர்ப்பு முறை.-** (1) கீழ் 1, 11 இல் குறிப்பிடப்படும் அனைத்து ஆட்சேர்ப்புக்களும் பொ. நி. சு. நிரூப இலக்கம் 24/95 இற்கு இணங்க நிகழ்த்தப்படும்.

(i) கனரக இயந்திர இயக்குநர் பதவிக்காக வாய்மூலம் மற்றும் செயன்முறை பரிசீலனையின் புள்ளி அடிப்படையில் ஒழுங்கு முறையான நேர்முகப்பரீட்சையின் மூலம் ஆட்சேர்க்கப்படும்.

(ii) திண்ம கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ மத்திய நிலைய பொறுப்பாளர் பதவிக்காக கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் மூலம் ஆட்சேர்க்கப்படும்.

| புள்ளி வழங்கப்படும் பிரதான தலைப்பு | உச்ச புள்ளியின் அளவு | தெரிவு செய்யப்படுவதற்கு கருத்திற்கொள்ளப்படும் குறைந்த புள்ளி மட்டம் |
|---|---|---|
| துறைக்குரிய செயன்முறை அறிவினை பரிசீலிப்பதற்காக (வினாக்கள் சிலவற்றிற்கு வாய்மூலம் விடையளித்தல்) | 20 | |
| கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் பற்றி பெற்றுக்கொள்ளப்பட்ட பயிற்சி பாடத்திட்டத்தில் பங்கேற்றிருத்தல் (சான்றிதழுக்கு 05 புள்ளிகள் வீதம்) | 25 | 50% |
| ஆளுமை | 05 | |

**5. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்:**

(i) இந்தப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரியதுமாகும் ;

(ii) விதவைகள்/தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு தொகையினை செலுத்துதல் வேண்டும் ;

(iii) தெரிவு செய்யப்படுபவர்கள் மூன்று வருட கால தகுதிக்காண் காலத்திற்கு உட்படல் வேண்டும். அக்காலப்பகுதியினுள் வேலை, வருகை மற்றும் நடத்தை திருப்திகரமாயிருந்தால் தகுதிகாண் கால முடிவில் நிரந்தரப்படுத்தப்படுவார். தற்பொழுது அரச/மாகாண சேவையில் உள்ள பதவி நிரந்தரமாக்கப்பட்ட நபர்கள் ஒரு வருட கால பதிற் கடமையாற்றல் காலத்திற்கு உட்படுத்தப்பட்டு சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

(iv) தாபன விதிக்கோவையின் நிபந்தனைகளுக்கும், மேல் மாகாண சபையின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், கௌரவ அரச அதிபரின் கட்டளைகளுக்கும், மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் காலத்திற்கு காலம் சட்டமாக்கப்படும் கட்டளைகளுக்கும், மாகாண நிருவாக ஆணையாளர் மற்றும் மாகாண நிருவாக நிறுவனத்தின் தலைவரின் கட்டளைகளுக்கும் இணங்கியதாக நடவடிக்கையின் மேற்கொள்ள அனைத்து ஊழியர்களும் கட்டுப்படல் வேண்டும்.

**6. பொதுவான தகைமைகள்.-**

(i) இலங்கை பிரசையாகவிருத்தல் வேண்டும் ;

(ii) பதவியின் கடமையினை நிறைவேற்றுவதற்கு உடல், உள தகைமையுள்ளவராயிருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பம் கோரப்படும் இறுதி திகதிக்கு கிட்டியதாக 03 வருடங்கள் தொடர்ச்சியாக மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(iv) நன்னடத்தையுள்ளவராயிருத்தல் வேண்டும்.

**7. நிபந்தனைகள்.-**

(i) விண்ணப்பம் கோரப்பட்டதன் பின்னர் அல்லது விண்ணப்பம் கோரப்படும் காலப்பகுதியில் இந்த ஆட்சேர்ப்பினை தாமதப்படுத்தல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது அறிவித்தலினை இரத்துச் செய்தல் அல்லது திருத்தஞ் செய்தல் சீத்தாவக்கபுர நகர சபையின் செயலாளரினாலாகும்.

8. விண்ணப்பதாரர்கள் கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்களில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை தங்களது சுய விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி /பிரயாண கடவுச்சீட்டு அனுமதிப்பத்திரத்தின் பிரதி ;

(iii) அண்மையில் (ஆறு மாதங்களினுள்) பெற்றுக்கொள்ளப்பட்ட நன்நடத்தைச் சான்றிதழ்கள் 2 ;

(iv) பதிவினை உறுதிப்படுத்துவதற்காக அண்மையில் (6 மாதங்களினுள்) பிரதேச செயலாளரின் கையொப்பத்துடனான கிராம அலுவலரின் சான்றிதழ் ;

(v) செல்லுப்படியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தின் பிரதி (கனரக இயந்திர இயக்குநர் பதவிக்காக மட்டும்);

(vi) கல்விச் சான்றிதழ் மற்றும் தொழில் தகைமைச் சான்றிதழ்கள் ;

(vii) அனுபவம் பற்றிய சான்றிதழ்.

ஏ. ஆர். சீ. கௌஷள்யா பண்டார,
செயலாளர்,
சீதாவக்கபுர நகர சபை.

நகர சபை அலுவலகம்,
சீதாவக்கபுர,
அவிசாவளை,
2016, பெப்புருவரி 18.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சீதாவக்கபுர நகர சபை - அவிசாவளை**

மேல் மாகாண உள்ளூராட்சி அரச சேவையின் .......................................... பதவிக்கான விண்ணப்பம்

1. முதலெழுத்துடன் பெயர் :-----.
முதலெழுத்துடன் கூறப்படும் பெயர் :-----.
2. நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :-----.
3. நிரந்தர முகவரி :-----.
4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : -----.
5. பால் நிலை (ஆண்/பெண்) : -----.
விவாகமானவரா/விவாகமாகாதவரா : -----.
6. பிறந்த திகதி : -
2016.03.31 ஆந் திகதியன்று வயது :- வருடங்கள் : -----, மாதங்கள் : -----, நாட்கள் : -----.
7. இலங்கைப் பிரசையானது பிறப்பின் மூலமா ? பதிவின் மூலமா ? : -----.
8. கல்வித் தகைமைகள் (தேர்ச்சி பெற்றுள்ள பரீட்சைகள் பற்றிய விபரங்கள்) : -
(i) க. பொ. த. (சா/தர) ப் பரீட்சை :-
(ii) தேர்ச்சி பெற்ற வருடம்/தரம் :-----
சுட்டிலக்கம் :
பரீட்சைக்கு தோற்றிய வருடமும் மாதமும் : -----.
தேர்ச்சி பெற்ற பாடங்கள் :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(iii) க. பொ. த. (உ/தர) ப் பரீட்சை :-
சுட்டிலக்கம் :
பரீட்சைக்கு தோற்றிய வருடமும் மாதமும் : -----.
தேர்ச்சி பெற்ற பாடங்கள் :

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

9. தொழில்சார் தகைமைகள். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்) :-----.
10. சேவை பற்றிய தகைமை :-----.
11. நீர் எப்போதாவது ஏதும் ஒரு குற்றத்தின் பேரில் நீதிமன்றம் ஒன்றால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா? :-----.
12. இங்கு குறிப்பிடப்படும் சகல விடயங்களும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துகிறேன். இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளின் பிரகாரம் என்னால் ஏதும் பிழையான தகவல்கள் தரப்பட்டுள்ளதாக நிரூபிக்கப்பட்டால் நான் நியமனம் பெற தகைமை அற்றவர் என்பதையும் நியமனம் பெற்ற பின் தெரிய வந்தால் சேவையில் இருந்து அகற்றப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -----.

**ஏற்கனவே அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கான திணைக்களத் தலைவரின் சான்றிதழ்.**

இந்த விண்ணப்பதாரராகிய திரு./திருமதி/செல்வி ............................................... என்பவர் தற்போது இத்திணைக்களத்தில்/ தாபனத்தில் .......................................... ஆக கடமை புரிகிறார். அவரை சேவையிலிருந்து விடுவிக்கமுடியும்/விடுவிக்க முடியாது. அவரை எந்த விதமான ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் ஆளாக்கப்படவில்லை என்பதை இத்தால் உறுதிப்படுத்துவதோடு விண்ணப்பப்பத்திரத்தை சிபாரிசு செய்து இத்தால் சமர்ப்பிக்கின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திணைக்களம்/நிறுவனம் :-----.
(பதவி முத்திரை இடவும்)
திகதி :-----.

*3-279*

---

**மாத்தறை பிரதேச சபை**

மாத்தறை பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள கீழே குறிக்கப்பட்டுள்ள பதவிகளுக்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | வெற்றிடத் தொகை | மாதாந்த சம்பள அளவு | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | நீர்க்குழாய் உருக்குத்தொழில் | 1 | உ. நி. சு. 2006/06 இன்படி PL 2-2006 A 12,210-10×130-10×145-10×160-12×170-ரூ. 18,600. | க. பொ. த. (சாதாரண) தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். மூன்றாம் நிலை மற்றும் தொழில்பயிற்சி கல்வி கொமிசன் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவரான தேசிய தொழில் பயிற்சித் திறன் தொடர்பான உரிய பிரிவின் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். (NVQ) |
| 2 | வேலை வெளிக்கள ஊழியர் | 1 | உ. நி. சு. 2006/06 இன்படி PL 1-2006 A 11,730-10×120-10×130-10×145-12×160-ரூ. 17,600. | 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 3 | சுகாதார ஊழியர் | 2 | உ. நி. சு. 2006/06 இன்படி PL 1-2006 A 11,730-10×120-10×130-10×145-12×160-ரூ. 17,600. | 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

1. **பொதுத் தகைமைகள் .-**

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
* நன்நடத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்;
* வதிவுப் பிரதேசத்தின் கிராம அலுவலரால் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவுச் சான்றிதழ் அதற்கு பிரதேச செயலாளரின் சிபாரிசு பெற்றிருத்தல் வேண்டும்;
* பதவிக்கு உகந்த அனைத்து தகுதிகளையும் பெற்றிருக்க வேண்டியதாக விண்ணப்பம் கோரப்பட்ட வர்த்தமானியில் குறித்த திகதிக்கு தகுதிகள் பெற்றிருத்தல் வேண்டும்;

2. **வேறு** :

(i) தற்போது மாத்தறை பிரதேச சபையில் இப்பதவிகளுக்காக நிரந்தர அமைய/மாதிரி/கொடுப்பனவு/கொந்திராத் முறையில் சேவை புரிபவராயின் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்;
(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாததும் 45 வயதுக்கு கூடாததுமாக இருத்தல் வேண்டும். (தற்போது நிரந்தர சேவையில் உள்ளவர்களுக்கு வயது எல்லை கணிக்கப்படமாட்டாது);
(iii) நீதி குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றம் சாட்டப்பட்டவராக தண்டிக்கப்பட்டவராக இருத்தல் கூடாது;
(iv) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது இடைப்பட்ட காலப்பகுதியில் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு, அறிவித்தலை இரத்துச் செய்தல், திருத்தி அமைத்தல் போன்ற அனைத்து தகுதிகளும் மாத்தறை பிரதேச சபையின் செயலாளரின் அதிகாரத்தின்படியே.

3. **ஆட்சேர்ப்பு முறைகள்**:
(i) முறையான நேர்முகப் பரீட்சை குழுவினரால் தகுதி வாய்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படும்.
(ii) பிரதான தகுதிகளை கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுண்டு.

4. **சேவைக்கு அமர்த்தும் நிபந்தனைகள்**:
(i) இப்பதவி நிரந்தரம் மற்றும் ஓய்வூதியம் உடையதாகும்;
(ii) விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்;
(iii) பதவி 3 வருட பயிற்சி காலத்திற்கு உட்பட்டதாகும் மூன்று வருடத்தின் பின்னர் வேலை, வருகை, மற்றும் நடத்தை நல்ல நிலையில் இருந்தால் மாத்திரமே பதவி நிரந்தரமாக்கப்படும்;
(iv) இந்த ஆட்சேர்ப்பு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் கட்டளைகளுக்கும் மற்றும் நிதிக் கட்டளைகளுக்கும், திணைக்களத்தின் கட்டளைகளுக்கும், அரச மற்றும் தென் மாகாண சபை மற்றும் விதிக்கப்படும் வேறு கட்டளைகளுக்கும் மற்றும் கொள்கைகளுக்கும் அனுசரித்து செயற்பட அனைத்து ஊழியர்களும் இணைந்திருத்தல் வேண்டும்.

5. **விண்ணப்பிக்கும் முறைகள்**.-
விண்ணப்பதாரிகளால் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்க A4 அளவிலான தயார் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 2016.04.19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதமாக "செயலாளர், மாத்தறை பிரதேச சபை, மாத்தறை" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் போடப்பட்ட கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும். தவறாக விலாசம் குறித்த விண்ணப்பங்களும் தாமதமாகி அல்லது நிபந்தனைகளுக்கு உட்படாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவங்களுடன் கீழே குறிப்பிடப்படும் சான்றிதழ்களின் நிழற்படப்பிரதிகள் இணைக்கப்பட வேண்டியதோடு, நேர்முகப் பரீட்சையின்போது மூலப் பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) வதிவினை உறுதிப்படுத்த கிராம அலுவலரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் (பிரதேச சபை செயலாளரின் உறுதிப்படுத்தலுடன்);
(4) சமீப காலத்தில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ்கள் இரண்டு;
(5) தொழில்பயிற்சிச் சான்றிதழ் ;
(6) மாத்தறை பிரதேச சபையில் சேவை புரிவதாயின் சேவைச் சான்றிதழ்.

பீ. ஜீ. பியல் ரனதேவ,
செயலாளர்,
மாத்தறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மாத்தறை,
2016, பெப்புருவரி 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மாத்தறை பிரதேச சபை**

..................... பதவிகளுக்கான விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) :----.
2. முதலெழுத்துக்களினால் குறிப்பிடும் பெயர்கள் :----.
3. நிரந்தர விலாசம் :----.
4. தொலைபேசி இலக்கம் :----.

5. மாவட்டம் :----.

6. பிறந்த திகதி :-

வருடம் :----, மாதம் :----, திகதி :----.

7. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

8. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :-

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

9. பால் : ஆண்/பெண் :----.

10. திருமணமானவரா?/திருமணமாகதவரா ? :----.

11. இனம் :----.

12. நீர் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் பிரசா உரிமை மூலமா? பதிவின் மூலமா ? :----.

13. கல்வித் தகைமைகள் :- (சான்றிதழ்களின் பிரதிகள் இணைத்தல் வேண்டும்)

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

14. பயிற்சியும் மற்றும் தொழிற் தகைமைகளும் :-----.

15. நீர், தற்போது பிரதேச சபையில் சேவை புரிவதாயின் :----.

(i) தற்போதைய பதவி:----.

(ii) பதவிக்கு உட்பட்ட திகதி:----.

(iii) பதவியின் தரம் (நிரந்தர/அமைய/தற்காலிக/மாதிரி ஒப்பந்தம் /கருத்திட்டத்தின்படி) :----.

இந்த விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட அனைத்து விபரங்களும் உண்மையானதும், அதில் எதுவும் பிழை இல்லை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். மேற்குறித்த தகவல்களில் எவையாயினும் பிழையானது எனத் தெரியவந்தால், எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின் தெரியவந்தால் எனது நியமனம் எந்தவித நட்டஈடுமின்றி இரத்துச் செய்யப்பட்டு சேவையிலிருந்து நீக்கப்பட ஏதுவாகும் எனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரியாகிய ......................................... திரு./திருமதி/செல்வி தற்போது இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் ...................... சேவை புரிகின்றார். மேற்படி பதவிக்காக அவர் தெரிவுசெய்யப்பட்டால் விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கின்றேன்./தெரிவிக்கவில்லை. அவரை எந்தவொரு வகையிலுமான ஒழுக்காற்று விசாரணை தண்டனைகளுக்கு உட்படுத்தப்படவில்லையெனவும் உறுதிப்படுத்துகிறேன். விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்து/சிபாரிசு செய்யாமல் சமர்ப்பிக்கின்றேன்.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திகதி :-----.

3-312

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**குருநாகல் பிரதேச சபை**

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (நிலையான துணைவிதி) சட்டம்*

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (நிலையான துணைவிதி) சட்டத்தின் 3 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவில் (3) ஆம் உப பிரிவின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரப்படி குருநாகல் பிரதேச சபையின் செயலாளர் தெலங்காகே துர்கா விக்கிரமசிங்ஹ ஆகிய நான், வீடு, சொத்து அபிவிருத்தி மற்றும் காணி துண்டிடப்பட்டு விற்பனை செய்தல் பற்றிய துணைவிதிக்கு வடமேல் மாகாண உள்ளூராட்சி மன்ற விடயப் பொறுப்பு அமைச்சர் மூலம் தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ள துண்டாக்கல், குருநாகல் பிரதேச சபை அதிகாரப் பிரிவில் நடைமுறைப்படுத்துதல் உகந்தது என்று 2016, பெப்புருவரி மாதம் 8 ஆந் திகதி 1039 ஆவது தீர்மான இலக்கத்தின் கீழ் என்னால் தீர்மானிக்கப்பட்டது என்பதனை இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

நெலங்காகே துர்கா விக்கிரமசிங்ஹ,
செயலாளர் மற்றும் செயல்கள், கடமைகளை,
நிறைவேற்றுகின்ற அலுவலர்,
குருநாகல் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குருநாகல்.

**தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (துணைவிதியில்) சட்டத்தின் 2 ஆவது பிரிவில் (1) ஆவது உப பிரிவில் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய (261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (நிலையான துணை விதிகள்) சட்டத்தின் (2) ஆவது பிரிவில் (1) ஆவது உப பந்தியின் கீழ் வடமேல் மாகாணத்தில் மாகாண சபையில் உள்ளூராட்சிமன்ற விடயப் பொறுப்புடைய அமைச்சரிடத்தில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி வடமேல் மாகாணத்தில் மாகாண சபையின் உள்ளூராட்சி மன்ற விடயப் பொறுப்பு அமைச்சரினால் ஒழுங்கமைக்கப்பட்ட வீடு, சொத்து அபிவிருத்தி மற்றும் காணி துண்டாக்கப்பட்டு விற்பனை செய்தல் தொடர்பாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானியில் IV (அ) பகுதியில் 2015.11.13 ஆந் திகதி மற்றும் 1940/28 ஆம் இலக்கத்தினால் குருநாகல் பிரதேச சபை எல்லைக்குள் செயற்படுத்த வேண்டும் என அறிவித்தலுக்குட்படுத்தப்பட்டதுடன் அத்துணை விதி வடமேல் மாகாண உள்ளூராட்சி மன்ற விடயப் பொறுப்பாளர் மூலம் துண்டாக்கல் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் கூறப்பட்டுள்ள வீடு, சொத்து அபிவிருத்தி மற்றும் காணி துண்டிடப்பட்டு விற்பனை செய்வது பற்றிய துணை விதியினை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானியில் IV (அ) பகுதியில் 2015.08.28 ஆந் திகதி மற்றும் இலக்கம் 1929/45 மூலம் அறிவிக்கப்பட்ட குறிப்பிட்ட துண்டாக்கல் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை துணை விதியின் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கமைய குருநாகல் பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆவது உப பிரிவின் ஒழுங்குவிதிகளுக்கமைய நான் தீர்மானிக்கின்றேன்.*

*3-188*

---

**பண்டுவஸ்நுவர பிரதேச சபை**

திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றி இடைநிலைச் சட்டம்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, மாகாண உள்ளூராட்சி நிறுவனங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வடமேல் மாகாணத்தில் உள்ளூராட்சி சபை விடயப் பொறுப்பு அமைச்சரினால் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரப்படி வடமேல் மாகாணத்தில் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் ஆக்கப்பட்டுள்ள 2015.09.25 ஆந் திகதிய 1933/40 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் (அதிவிசேடமானது) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்புடைய இடைநிலைச் சட்டம், பண்டுவஸ்நுவர பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நடைமுறைப்படுத்துவதற்கு உகந்தது என 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தின் 9 (3) ஆம் பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் படி, என்னால் தீர்மானம் எடுக்கப்படுமென இத்தால் அறிவித்தல்கள் விடப்படுகின்றன.*

எச். ஏ. ஜீ. நிஸ்ஸங்க,
செயலாளர்,
பண்டுவஸ்நுவர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பண்டுவஸ்நுவர,
2016, பெப்புருவரி 17.

*3-202*

**கங்க இஹல கோறளே பிரதேச சபை**

*திண்மக் கழிவுப்பொருட்கள் முகாமை பற்றிய துணைவிதிகள்*

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டம்*

*(261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமையவும், 1987 ஆம் அண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 (3) ஆம் உப பிரிவின் கீழும் பின்வரும் தீர்மானம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*டி. ஏ. ரஞ்சனி பிரேமலதா,*
*செயலாளர்,*
*கங்க இஹல கோறளே பன்வில பிரதேச சபை.*

*கங்க இஹல கோறளே பிரதேச சபை அலுவலகம்,*
*குருந்துவத்த,*
*2016, பெப்புருவரி 10.*

**தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பந்தியின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் (2) ஆவது பந்தியின் (1) ஆவது உப பந்தியின் கீழ் மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சருக்குச் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டதும், 2013.06.28 ஆந் திகதியையும் 1816/42 ஆம் இலக்கத்தையும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் IV (அ) பிரிவு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டதுமான திண்மக் கழிவுப்பொருட்கள் முகாமை பற்றிய துணை விதிகள், இந்தத் தீர்மானம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து கங்க இஹல கோறளே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் செயற்படுத்தப்படுமென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 (3) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய இத்தால் தீர்மானிக்கின்றேன்.*

*3-278*

---

**மஹரகம நகர சபை**

*நகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படியிலான அறிவித்தல்*

*நகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில் மஹரகம நகரசபையின் எல்லைகளில் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபைக்கு உரிய வீதிகளாக பிரகடனப்படுத்தப்படல் வேண்டும் என்று பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபையினால் உடைமையாக்கப்படுகின்றன என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*2. பொதுமக்கள் அல்லது உரிய காணி உடைமையாளர்களிடமிருந்து இந்த விடயம் குறித்து ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அத்தகைய ஆட்சேபனைகள் பொருட்டான காரணங்கள் வர்த்தமானியில் இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதியினுள் எழுத்தில் கொடுக்கப்படல் வேண்டும்.*

*3. ஆட்சேபனைகள் எதுவும் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் தெரிவிக்கப்படாவிடில் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகரசபைக்கு சொந்தமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு கட்டுப்படுத்தப்படும் என்று இத்தால் பொதுமக்களின் தகவல் பொருட்டு அறிவிக்கப்படுகின்றது.*

*செயலாளர் அல்லது சபையின்*
*கருமங்களுக்கான பொறுப்பாளர்,*
*மஹரகம நகரசபை.*

*நகர சபை அலுவலகம்,*
*மஹரகம,*
*2016, பெப்புருவரி 23.*

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | திட்டமிடல் இலக்கமும் திகதியும் | வீதியின் பெயர் | வீதியின் நீளம் | வீதியின் அகலம் | அட்டவணையின் படி எல்லைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | திட்டமிடல் இலக்கம் : 2500 இன் துண்டு இலக்கம் 31 மற்றும் 33 திகதி : 2004.03.02 | ஹோறஹேன வீதியிலிருந்து வ. ம. இல. 118/31 வரை கிறீன் டெறஸ் குறுக்கு வீதி | 115 மீ.<br>10 மீ.<br>15 மீ. | 6 மீ.<br>3.65 மீ.<br>4.5 மீ. | வடக்கில் : ஹோறஹேண வீதி, துண்டு இலக்கம் 2, 3, 4, 8, 17, 18, 19, 20<br>தெற்கில் : துண்டு இலக்கம் 10, 11, 12, 13, 14, 15, 16<br>கிழக்கில் : துண்டு இலக்கம் 5, 6, 7, 8, 9<br>மேற்கில் : துண்டு இலக்கம் 16, 20, 21, 23, 26 மற்றும் ஹோறஹேண வீதி |
| 1 | திட்டமிடல் இலக்கம் : 8458 திகதி : 2003.02.03 | கொட்டாவ, மாலம்பே மகளிர் விடுதி வீதி தொடக்கம் வ. ம. இல. 1617/17 கொண்ட வீடு காணப்படும் குறுக்கு வீதி | 12.5 மீ.<br>30.0 மீ.<br>56.0 மீ. | 8.5 மீ.<br>5-6 மீ. வரை<br>6 மீ. | வடக்கில் : காணி நிலம் துண்டு இல. 6, 7 மற்றும் 8 வரையான காணிநிலம்<br>தெற்கில் : பெண்கள் விடுதி வீதி<br>கிழக்கில் : துண்டு இல. 9, 10, 11, 12 என்ற காணிநிலம்<br>மேற்கில் : துண்டு இல. 1, 2, 3, 4, 5 என்ற காணி நிலம் |

3-287

---

**பிங்கிரிய பிரதேச சபை**

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (நியம துணைவிதி) சட்டம்*

*(261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (நியம துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் மூலம் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரமும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9.3 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரமும் பிங்கிரிய பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் வீடமைப்பு ஆதன அபிவிருத்தி மற்றும் காணிகளை துண்டுகளாக பிரித்து விற்றல் என்பன கீழே குறிப்பிட்டவாறு மேற்கொள்ளப்படல் வேண்டுமென இத்தால் நான் தீர்மானம் செய்திருக்கின்றேன். அதாவது,*

*"1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய (261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (நியம துணை விதிகள்) சட்டத்தின் (2) ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் மூலம் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் ஆக்கப்பட்டதன் பிற்பாடு, 2014.10.01 ஆந் திகதிய 1882/22 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 2015.01.20 ஆந் திகதிய 1898/28 ஆம் இலக்க இலங்கைச்*

சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி மூலம், 2015.08.28 ஆந் திகதிய 1929/45 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பிழைதிருத்தம், மாற்றங்கள் சகிதம் வடமேல் மாகாண சபையினால் 2015.04.07 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட வீடமைப்பு ஆதன அபிவிருத்தி மற்றும் காணிகளை துண்டுகளாக பிரித்து விற்றல் தொடர்பிலான நியம துணை விதியானது, இந்தப் பிரேரணை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து ஏற்று செயற்படுத்துவதற்கு குறித்த சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் நான் தீர்மானிக்கின்றேன்.

டபிள்யூ. எம். டயண ரஞ்சன் விக்கிரமசிங்க,
செயலாளர்,
பிங்கிரிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பிங்கிரிய,
2015, செத்தெம்பர் 29.

3-315

---

# நானாவித அறிவித்தல்கள்

## மாத்தறை மாநகர சபை

மாத்தறை மாநகர சபை கட்டளைச்சட்டம்

மாத்தறை மாநகர சபையினால் (252 ஆம் அத்தியாயம்) மாத்தறை மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 155 ஆம் பிரிவின் கீழ் மாநகர சபை வலுப் பிரதேசத்தில் அமைந்துள்ள கடற்கரைப் பிரதேசத்தில் மாலை நேரத்தில் நடத்தப்பட்டுவரும் கீழ் அட்டவணையில் குறித்த வியாபாரங்கள் தொடர்பாக கட்டணங்கள் அறவிடுவதற்கும் இது தொடர்பாக அவர்களினால் உத்தரவுப்பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

சேனக்க பல்லியகுருகே,
நகர ஆணையாளர்,
மாத்தறை மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
மாத்தறை,
2016, சனவரி,

மாத்தறை மாநகர சபை அலுவலகத்தில்-

(1) உணவு விற்பனை செய்வதற்காக நிறுத்தி வைத்துள்ள பஸ்வண்டி ஒன்றினால் ஒரு நாளைக்கு ரூபா 200 ஆக மாதத்திற்கு 5,000 ரூபா அறவிடல்.
(2) ஐஸ் கிறீம் வாகனம் ஒன்றினால் ஒரு நாளைக்கு 150 ரூபாவாக மாதத்திற்கு 4,000 ரூபா உட்பட அறவிடல்.
(3) ஐஸ் கிறீம் விற்பனைக்கான முச்சக்கர வண்டிக்கு ஒரு நாளைக்கு 50 ரூபாவாக மாதத்திற்கு 1,500 ரூபா உட்பட அறவிடல்.
(4) திவிநகும கருத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள டிமோபட்டா வாகனம் நிறுத்தி வியாபாரம் செய்வதாயின் ஒரு நாளைக்கு 50 ரூபாவாக மாதத்திற்கு 1,500 ரூபா உட்பட அறவிடல்.
(5) தள்ளுவண்டியில் வியாபாரம் செய்வதாயின் ஒரு நாளைக்கு 25 ரூபாவாக மாதத்திற்கு 800 ரூபா உட்பட அறவிடல்.
(6) ஐஸ் கிறீம் விற்பதற்கோ வேறு வியாபாரங்களுக்காகவோ, பயன்படுத்தும் மிதிவண்டி ஒன்றிற்காக ஒரு நாளைக்கு 20 ரூபாவாக மாதத்திற்கு 600 ரூபா உட்பட அறவிடல்.
(7) வேறு எந்த வியாபாரத்திற்காகவும் ஒரு நாளைக்கு 100 ரூபாவாக மாதத்திற்கு 3,000 ரூபா உட்பட அறவிடல்.

3-207

திருத்தம்

**குண்டசாலை பிரதேச சபை - மனிக்ஹின்ன**

*2015, திசெம்பர் 11 ஆந் திகதிய 1945 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பகுதி IV (ஆ) நானாவித அறிவித்தலின்கீழ் பிரசுரிக்கப்பட்ட 1945 ஆம் இலக்க அறிவித்தல் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.*

*2015.04.30 ஆந் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி 2016 ஆம் ஆண்டில் அறவிடப்படும், தகனபீடங்களுக்கான கட்டணம் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.*

*ஈ. டபிள்யு. அசேல ஏக்கநாயக்க,*
*தவிசாளர்,*
*குண்டசாலை பிரதேச சபை.*

***அட்டவணை 08***

*குண்டசாலை பிரதேச சபைக்கு சொந்தமான பலகொல்ல தகனப்பீடம் அமுனுகம தகனப்பீடத்தில் உடல் தகனம் செய்யப்படும் போது அறவிடவேண்டிய பணம் சம்பந்தமாக விடயம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.*

| | ரூபா ச. |
|---|---|
| (1) நகர எல்லைக்குள்ளான தகனம் | 6,000 0 |
| (2) நகர எல்லைக்குள் அப்பாற்பட்ட தகனம் | 7,500 0 |

*3-231*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.